தமிழ்ச் சிட்டு

சிறக்கும் வாழ்வே!

கல்வி நலம் பெரி(து); அதிலும்
கருத்து நலம் மிகப் பெரிது;
கருத்தை முற்றும்
சொல் விளக்கம் தரல் பெரிது:
சொன்னபடி செயல்பெரிது;
சோர்வே இன்றிப்
பல்வகையாய் மக்களுக்குப்
பயன் தொண்டாற் றல் பெரிது!
படிக்கும் போதே
செல்வழியைத் தீர்மானம்
செய்துகொண்டு நடந்தால்தான்
சிறக்கும் வாழ்வே!

குரல் : 20
இசை : 10

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

விலை :
உருபா : 1-0

தமிழ் ஆண்டு

வ. வேம்பையன்.

தமிழ் நாட்டில் தமிழ் ஆண்டு என்னும் பெயரில் வழக்கில் இருக்கின்ற 'பிரபவ' முதல் 'அட்சய' வரை உள்ள அறுபது ஆண்டுகளின் பெயர்கள் தமிழ் இல்லை. 60 ஆண்டுகள் பற்சக்கர முறையில் இருப்பதால் காலத்தைக் கணக்கிடுவதற்கு உதவியாக இல்லை. அதற்கு வழங்கும் கதையோ அருவருப்பாக (ஆபாசமாக) இருக்கிறது. அறிவுக்கும் அறிவியலுக்கும் பொருத்தமாக இல்லை;

எனவே, தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் ஆகியோர் 1921-ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந்தார்கள். திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது என்றும் அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது என்றும், திருவள்ளுவர் காலம் கி.மு. 31 என்றும் முடிவு செய்தார்கள்.

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் சுறவம் (தை); இறுதி மாதம் சிலை (மார்கழி;) கிழமைகள் வழக்கில் உள்ளவை. புத்தாண்டுத் தொடக்கம் சுறவம் (தை) முதல் நாள்.

ஆங்கில ஆண்டுடன் 31ஐக் கூட்ட வருவது திருவள்ளுவர் ஆண்டு. 1989 + 31 = 2020; தமிழ் நாடு அரசு இதை 1971 முதல் நடைமுறைப் படுத்தி வருகிறது.

ஏழு கிழமைகளில் புதன், சனி தவிர மற்றவை தமிழ்ப் பெயர்களே. புதன் அறிவன் என்றும் சனி காரி என்றும் வழங்கப் பெறுகின்றன.

பன்னிரண்டு ஓரைப் (ராசி) பெயர்களே பன்னிரண்டு மாதங்களின் பெயர்களாக வழங்கி வந்தன; அவை: 1. சுறவம் (தை) 2. கும்பம் (மாசி) 3. மீனம்(பங்குனி) 4. மேழம் (சித்திரை) 5. விடை (வைகாசி) 6. ஆடவை (ஆனி) 7. கடகம் (ஆடி) 8. மடங்கல் (ஆவணி) 9. கன்னி (புரட்டாசி) 10. துலாம் (ஐப்பசி) 11. நளி (கார்த்திகை) 12. சிலை (மார்கழி). இவை இன்றும் மலையாள நாட்டில் மாதங்களாகப் பின்பற்றப்படுகின்றன. ராசி என்று இங்கு வழக்கில் உள்ளன.

சித்திரை முதல் பங்குனி வரை உள்ள மாதங்களின் பெயர்கள் தமிழ் இல்லை என்று மொழி ஞாயிறு பாவாணர் பகர்கிறார்.

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என இன்று உலகம் எங்கும் எழுதப் படும் எண்கள் அரபி எண்கள் என்று கூறப்படுகின்றன. அரபியர்கள் இவற்றை இந்திய எண்கள் என்கிறார்கள். இவ்வாறு கூறப்படும் அந்த எண்கள் பழைய தமிழ் எண்களே என்பது பழந்தமிழ் எண் வடிவங்களை நோக்கின் உணரப்படும் என்று மூதறிஞர் மு. வ. கூறுகிறார்.

நாம் புதியதாக எதையும் புகுத்தவில்லை; இடைச்செருகலை அகற்றி இழந்ததை மீட்டு நடைமுறைக்குக் கொண்டு வருகின்றோம்.

உறுப்பினர்களைச் சேர்த்து உதவுங்கள்!

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களை நிறுத்த வேண்டாம் என்று எழுதும் அன்பர்கள் ஒவ்வொருவரும் பத்து உறுப்பினர்களைச் சேர்ப்பது என்று உறுதி பூண்டுவிட்டால் எவ்வளவு பயனுடையதாக இருக்கும்! எண்ணிப் பாருங்கள்; செயல்படுங்கள்!

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம்
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே !

குரல் . 20] (தி.பி-2021) சிலை-சுறவம் (சன-பிப் 90') [இசை-10

விளம்பரம் வேறு! புகழ் வேறு!

பொன்னுக்கும் பொருளுக்கும் மக்கள் ஆசைப்படுவது போலவே, பெயருக்கும் புகழுக்கும் அவர்கள் ஆசைப்படுவது இயல்பாக இருக்கிறது.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. (236)

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில். (233)

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு. (231)

—என்னும் திருவள்ளுவர் திருவாய்மெய்யுரைகளும்,

'புகழெனின் உயிருங் கொடுக்குவர்
இகழெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்.'

—எனும் புறநானூற்று அடிகளும், புகழையே வாழ்விற் கிடைக்கும் அழியாப் பெரும் பயனாகக் கூறுகின்றன. புகழ்வேண்டாதார் எவருமே இல்லை. அதன் பெருமை அறியாதவர் அறியாதவரே!

ஆனால், புகழ் என்பது என்ன? பெரும்பாலும் மக்கள் அனை-

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்;
ஆசிரியர்: மா. பொழிலன்;
தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005; (தமிழகம்)

வரும் தங்களுக்குக் கிடைக்கும் பெயரையும் விளம்பரத்தை-படிமே புகழ் என்று தவறுகக் கருதிக் கொண்டிருக்கின்றனர். புகழ்வேறு; பெயர்வேறு; விளம்பரம் வேறு.

விளம்பல் பாராட்டு வியன்பெயர் சீர்புகழ்
வளந்தரும் இசைபெறல் வாழ்வெனப் பெறுமே!

அஃதாவது, பொதுவாக மக்களிடையில் தம் பெயர் பரவுவது, பல நிலைகளில் பல பெயர்களைப் பெறும். அவை விளம்பரம், பாராட்டு, பெயர் பெறுதல், சீர், புகழ் இசை என்பன ஆகும்.

இவற்றுள், தம் பெயரைத் தாமோ அல்லது பிறரோ விளம்-பல் செய்வது, அஃதாவது பலரிடமும் பேச்சு வழியும் எழுத்து வழியும் பரப்புதல் செய்வது விளம்பரம் ஆகுமே யன்றிப் புகழ் ஆகாது. மிகப் பலர் விளம்பரம் பெறுவதையே புகழ் என்று தவறுகக் கருதிப் பெருமிதம் கொள்கின்றனர். அது தவறு.

இனி, பாராட்டுப் பெறுவது என்பது தாம் செய்த ஓரிரண்டு செயலுக்காகவோ, அறிவு நிலைக்காகவோ, குறிப்பிட்ட சிலரால் குறிப்பிட்ட காலத்தில் பலபடப் பெருமை கூறிப் பேசப் பெறு-வதோ, பரிசுகள் பெறுவதோ, பாராட்டுப் பெறுவதாகும். அவ்-வாறு பாராட்டுப் பெறும் நிகழ்வும் செயலும் முடிந்த பின்னர், அம்மதிப்பும் இயல்பான தன்மையுடன் ஒரு கால எல்லைக்குள் நிறைவுற்று விடும். தொடர்ந்து, அச் செயலுக்காக மீண்டும் மீண்டும் மதிக்கப் பெறுவது நிகழாது. எனவே இதுவும் புகழ் என்று நினைப்பது தவறு.

அடுத்து, பெயர் பெறுதல் என்பது, ஒரு சிறப்பு நிலைத் தகுதி நோக்கி, அத்தகுதிக்கு உரியவராக நம்மை மக்கள் மதிப்புடன் கூறிக் கொள்வது. ஒரு தனிப்பட்ட செயலில் இவர் திறமை-யுடையவர் என்றோ, ஒரு வகைத் தனிப்பட்ட முயற்சியில் வெற்றியடைந்தவர் என்றோ, பிறரால் பெயர் சுட்டிச் சொல்லப் பெறுவது. இதுவும் ஒரு நிலை பெற்ற செயலடிப்படையிலோ, அறிவடைப்படையிலோ, கல்வி அடிப்படையிலோ, செல்வ அடிப்படையிலோ நிகழும் ஒரு காலவரை பெற்ற பெயர் சுட்டிப் பேசப் பெறும் நிகழ்வாகும். இதுவும் புகழ் என்னும் பெருமாட்சிக்கு உரியதன்று.

மேலும், சீர் பெறுவது என்பது, ஒருவர் செய்த செய்தற்-கரிய நற்செயலாலோ, கொடையாலோ, அறிவு வெளிப்பாட்-டாலோ, தன் தேச மக்களிடமும் அயல் தேச மக்களிடமும் என்றென்றும் நிலைத்த பெருமதிப்பையும், பெருந் தகுதியையும் பெற்ற தன்மையில் பேசப் பெறுவது; நினைக்கப் பெறுவது; இதுவும் புகழின் முழுப் பெருமையையும் பெறுது;

இனி, புகழ் என்னும் தன்மை இவ்வரிசையில், இசை என்னும் சிறப்புப் பெயர்க்கு முன்னதாகச் சொல்லப் பெறுவது. புகல் என்னும் பெயரடியாகத் தோன்றிச் சிறப்பு எழுத்தான 'ழ'கரம் பெற்று நிலை பெற்ற சொல்; உயிருடன் உள்ள பொழுது உடம்-

(7 ஆம் பக்கம் பார்க்க)

சர்க்கரை நோயா?
வாய்விட்டுச் சிரியுங்கள்!
நோய் குணமாகும்!

இன்று உலகம் முழுவதிலும் 6 கோடி மக்கள் நீரிழிவு (சர்க்-கரை) நோயால் தாக்குண்டுள்ளனர். அவர்கள் எண்ணிக்கை ஆண்டு தோறும் 5.9. விழுக்காடு அதிகரித்து வருகிறது. இவ்-வாண்டு முடிவுக்குள் நீரிழிவு நோய்தான் மிகவும் பரவலாகப் பரவியுள்ள நோயாக இருக்கும் என்று உலக நலவாழ்வு அமைப்-பின் அறிஞர்கள் கருதுகின்றனர். அத்துடன் அடுத்த 15 ஆண்டு-களுக்குள் இந்நோயால் தாக்குண்டிருப்பவர்களின் எண்ணிக்கை இருமடங்காகும் என்றும் அவர்கள் கணித்துக் கூறுகின்றனர்.

அண்மைக் காலம் வரை இந் நோய் நிலை மிகவும் அஞ்சத்தக்க-தாகவே மருத்துவர்களால் கருதப்பட்டு வந்தது. இந் நோய்க்குப் பயனுள்ள பண்டுவ முறை இருக்கவில்லை என்றே அவர்கள் கருதி-னர். ஆனால் இப்பொழுது சோவியத்து உருசிய மருத்துவர்கள் இந்நோயைத் தீர்க்க வேறு பல முறைகள் பற்றி ஆய்வு செய்து கொண்டேயிருக்கிறார்கள். தாங்கள் ஒரு தீர்வையும் கண்டு பிடித்து விட்டதாகவும் அவர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள்.

''நீரிழிவு நோய்க்கான காரணங்களை விளக்கும் ஒரு புதிய கருத்நமைப்பை நாங்கள் வகுத்துள்ளோம். எங்களுடைய பண்டுவ முறைக்கு இதை அடிப்படையாகக் கொண்டுள்ளோம்'' என்று மாசுக்கோ உயிரியல் ஆய்வுக் கூடத்தின் தலைவர் ஏ. குசின் கூறுகிறார்.

''குருதியிலுள்ள சர்க்கரையைத் தசையின் உயிரணுக் களுக்கு விரட்டுவதற்குத் தேவையான கணையநீரை (இன்சுலினை) கணைய உறுப்பினால் சுரக்கச் செய்யமுடியாத ஒரு நிலைமைதான் நீரிழிவு (சர்க்கரை) நோய்'' என்று மரபான மெய்ம்மம் கூறுகிறது.

அதே சமயத்தில் கரிநீரிகி (கார்போ-ஐடிரேட்-Carbo-Hydrate)கள் பிளவுபடுவதன் விளைவாக உடலின் ஆற்றலை உரு-வாக்கும் நிகழ்வும் நடைபெறுகிறது என்று கருதப் பெறுகிறது.

இது தொடர்பாக மருத்துவயியல் அறிஞர் குசின், மாசுக்-கோவில் ஓர் ஆய்வுக் கூடத்தைத் தொடங்கினார். அங்கு பல நூற்றுக்கணக்கானவர்கள் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டனர். அவர்-கள் யாவரும் கரிநீரகி (கார்போ-ஐடிரேட்) வளர்சிதை மாற்றம் கொண்டவர்களாக இருந்தனர். எனவே வளர்சிதை மாற்ற நிகழ்வுப் போக்குகளைச் சரி செய்வதன் மூலம் நீரிழிவு நோய்க்கு மருத்துவம் செய்யமுடியுமா? முடியுமானால் எப்படி?

ஒரு குறிப்பிட்ட வளர்சிதை மாற்ற வகையைத் தோற்றுவிக்-கும் காரணங்களைத் தெரிய முடிந்தால், அது இயல்வதே என்று குசின் கருதுகிறார்.

அவர் அந்நிலையைக் கீழ் வருமாறு விளக்குகிறார்: வடதுருவ மண்டலத்தில் வாழும் ஒருவர் பல மணி நேரம் அவருடைய நாய் வண்டியுடன் ஆழமான உறைபனியில் ஓடமுடியும். அவருக்குக் கொழுப்பு வளர்சிதை மாற்றம் ஏற்படுகிறது. அவருக்கு நீரிழிவு நோய் ஏற்படுவதே இல்லை. நீண்டதூரம் ஓடுபவர்கள் நிலையிலும் விளைவு இதுவே. குறைந்த தூரமே ஓடுபவர்களுக்குக் கரிநீரகி (கார்போ-ஐடிரேட்) வளர்சிதை மாற்றம் ஏற்படுகிறது. ஏனெனில் இவர்களது உடலில் கொழுப்பைக் காட்டிலும் வேகமாகச் சர்க்கரை பிளவுபடுகிறது. எனவே, ஓட்டக்காரர்கள் உடனடியாகத் தேவையான ஆற்றலை மீண்டும் மீண்டும் பெறுகின்றனர்.

அச்சமும், நடுக்கமும், கொடுமை உணர்ச்சியும், மகிழ்ச்சியற்ற நிலையும் உடலில் ஈரலையும் கணையத்தையும் தாக்குகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால்தான் மிகப் பலர்க்கு நீரிழிவு நோய் தோன்றுகிறது.

மகிழ்ச்சியான உளப்பாங்கின் விளைவாகக் குருதியில் சர்க்கரைச் சாரம் குறைகிறது என்று மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதனால் குருதியில் சர்க்கரை உள்ள ஒரு நோயாளிக்குக் கொடுக்கப் பெற்று வந்த 'இன்சுலின்' அளவையும் மருத்துவர்கள் குறைத்தனர்.

நோய்களுக்கு இரண்டு வகையான காரணங்கள் உள. ஒன்று உளவியல் (மனவியல்) தாக்கம். இரண்டு உடலியல் தாக்கம். இந்த இரண்டு காரணங்களிலும் மருத்துவர் முயற்சி செய்து, நோயாளிக்கு உரிய மனநிலை மாற்றத்தையும் உடலியல் மாற்றத்தையும் ஏற்படுத்துவது புதுமுறை மருத்துவ முறையாகும்.

உளவியல் முறைகளில் பயிற்சியை உரிய காலத்தில் மேற்கொண்டால் நீரிழிவைத் தடுத்துக் கொள்ளலாம். ஓர் உளவியல், மருத்துவயியல் அறிஞரின் உதவியுடன் ஒருவர் இவ்வுளவியல் பயிற்சியை மேற்கொள்வதே நல்ல விளைவைத் தரும். அவ்வாறு பயிற்சி மேற்கொள்ளும் ஒரு நீரிழிவு நோயாளி தனது கடந்த காலத்தின் கசப்பான நினைவுகளை அறவே போக்கிக் கொள்ள வேண்டும்.

இந்த முறையில் நோய்களின் உளவியல் காரணங்களை மட்டுமன்றி, உடலியல் மட்டத்தில் அவற்றின் சில விளைவுகளையும் போக்குவது இயல்வதாகும். எடுத்துக் காட்டாக, உளவியல் அடிப்படையில், நம் உடலில் உள்ள ஈரல் சர்க்கரை தோற்றுவிப்பதைக் குறைத்துக் கொள்வதாக எண்ணலாம். இப்படி எண்ணும் பொழுது ஈரல் அவ்வாறே சர்க்கரை உருவாக்குவதைக் குறைத்துக் கொள்ளுவது நடக்கும். இது போலவே நம் குருதியில் உள்ள சர்க்கரை, உயிரணுக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்று நாம் ஆழமாக எண்ணலாம். இதுவும் கட்டாயம் நடைபெறும். ஆனால் ஒரேயொரு சிக்கல் அல்லது தொல்லை-என்னவெனில், நம் உள்ளத்தை மகிழ்ச்சியாகக் கற்பனை செய்து

வைத்துக் கொண்டு, இத்தகைய எண்ணங்களை நாம் அதிக நேரம்-காலம்-நீடிக்கச் செய்ய வேண்டுவதே ஆகும்.

ஆனால், உளவியல் காரணங்கள் எப்பொழுதுமே முதன்மை-யானவையோ எளிதானவையோ அல்ல. அதனால்தான் உடலியல் முறையில்-அஃதாவது மருத்துவ முறையில்-உடலைச் சரி செய்து கொள்வது முகாமையானதாகவும், பயனுறுதியுள்ளதாகவும் கருதப்பெற்று வருகிறது. உளவியல் முறையில் மனத்தைப் பல்-வேறு உணர்வு நிலைக்குக் கொண்டுவருவது சில வேளைகளில் மனச் சோர்வையும் கவலையையும் உண்டாக்கலாம் என்றும் கருதப் பெறுகிறது.

எஃது எப்படியாயினும், நோயாளியைப் பல்வேறு மனத்-தாக்கங்களிலிருந்தும் எரிச்சல்களிலிருந்தும் வெளிக் கொணர் தலும், அவருக்குரிய வாய்ப்பான சூழலை உருவாக்குதலும் சரி-யான வகையில் பராமரிக்கப்படுமானால், நீரிழிவு நோயைக் கட்டாயம் போக்கிவிடமுடியும். இம்முறையில் ஒரு நோயாளியை ஒரு கிழமையில் குணப்படுத்தமுடியும் என்றும் மனவியல், மருத்துவ இயல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால், இவ்வாறான சூழலை உருவாக்குவதற்கு, வளிநிலைக் கட்டுப்பாட்டில் அழுத்தம் குறைக்கப்பெற்ற ஓர் அறையில் ஒரு நோயாளி இருக்கும்படி செய்யவேண்டும். அவருடைய முகாமையான உடலியல் தன்மை-களை அஃதாவது செயற்பாடுகளை ஒரு கணினி வழியாக ஒழுங்கு படுத்தவேண்டும். வெளிச்சம், காற்று, வெப்பநிலை, அழுத்தம், இசைவு ஆகியவற்றில் நோயாளியின் மனநிலைக் கேற்றவாறு மாற்றங்கள் செய்யப் பெறவேண்டும்.

இம் மனவியல் மருத்துவத்திற்குச் சில கருவிகளும் தேவை. ஆனால் அதே சமயத்தில் அவை சிக்கலானவையும் அதிகச் செலவு பிடிக்கத் தக்கனவும் ஆகும். எனவே எளிதில் கையாளத்தக்க, கைப் பெட்டியில் வைத்துக் கொள்ளத் தக்க ஒரு கருவியை உருவாக்கி வருவதாக, அறிவியலறிஞர் குலிகோவ் கூறுகிறார்.

ஆயினும் உடம்பு தானாகவே நோயைச் சரி செய்து கொள்ள முடியும் என்று அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் சில நிலைமைகள் தேவைப்படுகின்றன. இந்த வகையில் அமெரிக்க எழுத்தாளர் நார்மன் கசின்சு சிரிப்பு முறையின் மூலம் நீரிழிவு நோயைப் போக்கிக் கொண்டார். அவர் தம்மை மகிழ்ச்சியான மனோநிலையில் வைத்துக் கொண்டார். முழுமையாகக் குண-மடைவதற்குச் சிரிப்பே போதுமானதாக இருந்தது. அவருடைய நன்னம்பிக்கையின் அடிப்படையில் செய்து கொண்ட உளவியல் பண்டுவ முறையின் விளைவு பரவத் தொடங்கியது. எனவே, மிக அதிகமான பேர்கள் அவர் முறையைப் பின்பற்றி நலமடைந்-துள்ளார்கள்.

தம்மைத் தாமே நோயினின்றும் குணப்படுத்திக் கொண்ட ஒருவர், தமது பட்டறிவுப் பண்டுவ முறையையும் அதன் நன்-

இந்தியத் திட்ட நேரம் என்றால் என்ன?

கதிரவன் எப்பொழுது நம்முடைய தலையின் உச்சிக்கு நேராக வருகிறதோ அப்பொழுது நாம் இருக்கும் அந்த இடத்தில் பகல் மணி 12-00ஆக இருக்கும்—என்பதை அடிப்படையாகக் கொண்டுதான் நேரம் உறுதி செய்யப் பெறுகிறது. இதைத் தளநேரம் (Local Time) என்பார்கள் (தளம்-இடம். சமசு-கிருதத்தில் இதை ஸ்தலம் என்று மாற்றிக் கொண்டார்கள்.)

உலகம் உருண்டை. அது தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறது.

அப்படியானால் இந்த உலகத்தில் உள்ள எல்லா இடங்களுக்-கும் கதிரவன் ஒரே நேரத்தில் உச்சியில் இருக்கமுடியாது.

மேலும் உலக கோளத்தை 360 நெடுங்கோடுகளாக (தெற்கு வடக்குக் குத்துக் கோடுகளாக) நிலவியல் ஆராய்ச்சியாளர்கள் பிரித்திருக்கின்றார்கள். (இதைத்தான் சமசுகிருதத்தில் 'தீர்க்க ரேகை' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.)

உலகம் தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக் கொள்ள எடுத்துக் கொள்ளும் நேரம் 24 மணி நேரம்.

அஃதாவது 360 நெடுங்கோடுகளைக் கடக்க ஆகும் நேரம் 24 மணி; அப்படியானால் ஒரு நெடுங்கோட்டைக் கடக்க ஆகும் நேரம் 4 நிமையங்கள்.

உலகம் மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றுவதால், ஓரிடத்-திலிருந்து கிழக்கே செல்லச் செல்ல, ஒரு நெடுங்கோட்டுத் தொலைவிற்கு, 4 நிமையங்கள் மேனி நேரம் கூடுதலாகவும், மேற்கே செல்லச் செல்ல 4 நிமையங்கள் மேனி குறைவாகவும் நேரம் ஆகும் என்பதை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக, இந்தியாவில் உள்ள சில பெரிய நகரங்-களில் உள்ள நெடுங்கோடுகளையும், தள நேரங்களையும் கவனிப்-போம். கல்கத்தா நகரம் 88° கிழக்கு நெடுங்கோட்டில் உள்ளது. பம்பாய் நகரம் 73 கிழக்கு நெடுங்கோட்டில் உள்ளது. இரண்டுக்-கும் 15 நெடுங்கோடுகள் வேறுபாடு உள்ளது. அஃதாவது இரண்டு நகரங்களுக்கிடையேயும் உள்ள நேரம் (15 × 4 = 60 நிமையம்) ஒரு மணி நேரமாகும்.

கல்கத்தாவில் நண்பகல் 12 மணி என்றால் பம்பாயில் முற்பகல் 11 மணியாக இருக்கும். இதைத்தான் தள நேரம் (Local Time) என்கிறார்கள்.

ஆனால் நடைமுறையில் அப்படி நாம் கொள்வதில்லை. அப்படி

மையையும், மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று மாசுக்கோ ஆய்வுக்கூட ஆராய்ச்சியாளர்கள் வி. மக்கரோவும், ஒய். மக்கரோவும் கூறுகின்றனர்.

இவ்வாறு, உயிரியல், ஆற்றலியல் ஆய்வுக்கூடம் நீரிழிவு நோய்க்கெதிரான தனது போரைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. —அடிப்படை: சோவியத்து மருத்துவ இயல் கட்டுரை.

வைத்துக் கொண்டால், ஒவ்வொரு நாட்டின் ஒவ்வோர் இடத்திலும் வெவ்வேறு மணி நேரத்தை நடைமுறை அளவாக வைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். அப்படி வைத்துக் கொண்டால் குழப்பம் ஏற்படும். வானொலி, தொடர்வண்டி, வானூர்தி போன்ற எல்லா வகை நேரங்களிலும் குழப்பம் ஏற்பட்டு மக்களிடையில் நடைமுறைக் குளறுபடிகள் நேரும்.

இக்குழப்பங்களைத் தவிர்க்க. ஒவ்வொரு நாடும் ஒரு திட்ட நேரத்தை வரையறை செய்து கொள்ளவேண்டியிருக்கிறது. இந்த நேரந்தான் திட்ட நேரம் அல்லது வரையறை நேரம் எனப்படும். ஆங்கிலத்தில் இதை (Standard Time) என்பார்கள்.

அதன்படி இந்தியாவின் திட்டநேரம் என்பது, அலகாபாது வழியே செல்லும் 82.5 கிழக்கு நெடுங்கோட்டை நடுவாக வைதது்க் கணக்கிடப் பெறுகிறது.

நம்முடைய கடிகாரத்தில் பகல் மணி 12.00 என்றால், அஃது உண்மையில் அலகாபாது நகரத்தில் பகல் மணி 12.00 என்பது தான் பொருள். இப்படி, இந்தியா முழுமைக்கும் ஒரே அளவு நேரம் (Standard Time) கணக்கிடப் பெறுகிறது என்பதை அறிந்து கொள்க.—திருமலைராசன் நன்றி. 'உண்மை' 15—5—'87

(2ஆம் பக்கம் தொடர்ச்சி)

பினுள் இருந்த உயிர், அதை விட்டு வெளியேறிய பின்னர் எஞ்சியுள்ள உலகம் நிலைபெறும் காலமெல்லாம் மக்கள் உள்ளத்தில் உணர்வாயும், வாயில் மொழியாகவும், எழுத்தில் வாசகமாகவும், கதை, நாடகங்களில் கருத்தாகவும், புகலிடம் கொண்டு விளங்கித் தோன்றும் பெயர்ப் பெருமையே புகழ் என்பதாகும். தமக்கு (தம் உயிர்க்கு)ப் புகலிடமாகிய பூத உடல் அழியப் பெற்றாலும், மற்றுள்ள மாந்த உடல்களையும், அவர் தம் உணர்வுகளையும், உணர்வியக்கங்களையும் புகலிடமாகக் கொண்டு விளங்குவதே புகழ் என்னும் சொல்லுக்கான முழுப் பொருளாகும்.

இனி, ஒருவர் பெற்ற புகழை எழுதுவதும், பேசுவதுமாகவன்றி, பின்வரும் மக்கள் பாவும் பண்ணும் கூட்டிக் கருவிகளுடன் இணைந்து இசைத்திசைத்து மகிழ்வுறும் நிலையே இசை என்று வழங்கப் பெறுவதாம் என்க.

எனவே, வெறும் விளம்பரத்திற்கும், பாராட்டுக்கும், பெயருக்கும், சீருக்கும்—மட்டுமே இலக்காக இராமல் புகழும் சீரும் பெற்று, வையத்து வாழ்வாங்கு வாழும் சிறப்பு நிலைகளை எய்தவே நாம் விழைதல் வேண்டும் என்க.

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். (239)

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். (240)

நூற்சுருக்கம்:

வல்லினம் மிகுதலும், மிகாமையும்!

(அண்மையில், சென்னை 57, எண்ணூர், பைந்தமிழ்ப் பாசறை, திருக்குறள்மணி. புலவர் இறைக்குருவனார் எழுதிய 'வல்லினம் மிகுதலும் மிகாமையும்' என்னும், சிறிய, கையடக்கமான, இரண்டு உருபா விலையில், மாணவர்களுக்கென்று ஒருநூலை, வெளியிட்டுள்ளது.

அதில், தமிழில், வல்லினம் மிகும் இடங்களையும் மிகாத இடங்களையும் எல்லார்க்கும் விளங்குமாறும், மனத்தில் இறுத்திக் காள்ளுமாறும், எளிய நடையில், ஆசிரியர் பல இலக்கணக் கூறுகளையும் நல்ல எடுத்துக்காட்டுகளுடன் கூறியிருக்கின்றார், இந்த நூலைத் தமிழ் மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், பாவலர்கள் முதலியோர் அனைவரும் கட்டாயம் வாங்கிப் படிக்கவேண்டும். மற்றவர்களையும் படிக்கச் செய்யவேண்டும்.

அந்த நூலில் உள்ள முகாமையான செய்திகளை மட்டும் இச்சுருக்கக் கட்டுரையில் மாணவர்கள் பயன் பெறுமாறு தொகுத்துக் கொடுத்துள்ளோம். முழு நூலையும் படிக்க-வைத்துக் கொள்ள-விரும்புபவர்கள், முன்னுள்ள பாசறை முகவரிக்கேனும், நூலாசிரியர் முகவரிக்கேனும் (18. அரங்கையா தோட்டத்தெரு, மயிலார்ப்பூர். சென்னை 600 004) பணமனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். இந்நூல் அனைத்துப் பள்ளி மாணவர்களாலும் படிக்கப் பெறவேண்டுவதாகையால், பள்ளித் தமிழாசிரியர்கள் தம் தம் சார்பில் இந்நூலை 50,100 என்று மொத்தமாகப் பண மனுப்பி வாங்கி மாணவர்களுக்குத் தருவது மிகப் பயனுடையதாகும்.
—இதழாசிரியர்.)

தமிழின் இயல்பான ஒலிநயத்துக்கும் தெளிவான பொருள் விளக்கத்திற்கும் சொற்கள் ஒன்றுடன் சேரும் முறையை நன்கு அறிந்து கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும்.

சொற்புணர்ச்சியுள் வல்லெழுத்து மிகுதலும் மிகாமையும் பற்றிய பகுதி சிறப்பாகக் குறிக்கத் தக்கது.

விரிவான இலக்கண நூல்களில் இவற்றைக் கற்றுத் தெளிவது பொதுநிலைக் கல்வியாளர்க்கும், இலக்கியம், மொழியியல் அல்லாத பிற பிற துறை மாணுக்கர்களுக்கும் இயலாததாக இருக்கின்றது.

தமிழில் இரு சொற்கள் ஒன்றுடன் ஒன்று சேரும் சேர்க்கை புணர்ச்சி என்று குறிக்கப் பெறுகின்றது.

புணர்ச்சி இலக்கணத்தைச் செம்மையாகத் தெரிந்து கடைப்பிடித்தல் வேண்டும். அல்லாக்கால் ஒலிநயமும் கெடும்; பொருள் மயக்கமும் உண்டாகும்.

வாழைப்பழத்தை வாளப்பளம் என்று எழுதுவது போலவே, 'வாழைபழம்' என்று எழுதுவதும் பிழையானது; நகைப்புக்கு உரியது.

'கலைக்கழகம்' என்று வல்லெழுத்து மிகுந்திருந்தால்தான் கலை வளர்க்கும் கழகமாக அது தலைநிற்கும்; 'கலை கழகம்' என்றால், அது கலைந்துபோகும் கழகமாக நிலை குலையும்.

'வேலை கொடு' என்றால் செய்வதற்கு ஏதேனும் வேலை (பணி) கொடு என்றும், 'வேலைக் கொடு' என்றால், போர்க் கருவியாகிய வேலினைக் கொடு என்றும் பொருள்.

இவ் வேறுபாடுகளை எண்ணிப் பாருங்கள்!

இனி, புணர்ச்சிக்குரிய இரு சொற்களுள் முதலில் நிற்பது நிலைமொழி என்றும், அடுத்து வருவது வருமொழி என்றும் வழங்கப்பெறும்.

நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில், நிலைமொழியை யொட்டி, 'க், ச், த், ப்' என்னும் வல்லின ஒற்றெழுத்துகளைச் சேர்த்து எழுதுதலே வலிமிகுதல்—வல்லெழுத்து மிகுதல் என்று குறிப்பிடப் பெறுகின்றது.

'க்' என்பது 'க, கா, கி, கீ' முதலான அவ் வரிசை உயிர்மெய் எழுத்துகள் அனைத்தையும் குறிக்கும். ச், த், ப் ஆகிய எழுத்துகளுக்கும் அப்படியே கொள்க,

இனி, வல்லெழுத்துமிகும் இடங்களையும் மிகா இடங்களையும் பார்ப்போம்.

(1) பண்புத் தொகையில் வல்லெழுத்து மிகும்.

நிறம், குணம், அளவு, சுவை, வடிவம், தன்மை ஆகியன பண்புகள் ஆகும்.

பண்புப் பெயர்கள், பசுமை, நன்மை, சிறுமை, இனிமை, தன்மை, வெம்மை என்பவற்றைப் போல் பெரும்பாலும் 'மை' என்னும் இறுதிநிலை நிலை பெற்றும், நீலம், கசப்பு என்பவற்றைப் போல் சிறுபான்மை 'மை' இறுதி பெறாமலும் வரும்.

பண்புப் பெயர்கள் பண்பைக் கொண்டுள்ளவற்றின் (பண்பியின்) பெயர்களோடு சேரும் போது 'பசுமை ஆகிய புரட்சி' என்பது போல், நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் 'ஆகிய' என்னும் இடைச்சொல் (பண்புருபு) இடம் பெறுதல் வேண்டும்.

இப் பண்புருபு (ஆகிய) மறைந்து (தொக்கி) நின்று பொருள் கொடுப்பது பண்புத் தொகை எனப்பெறும்.

இவ்வாறு வரும் பண்புத் தொகைச் சொற்களுக்கிடையில் வல்லெழுத்து மிகுந்து வரும்.

எடுத்துக் காட்டுகள்:

இளமை (ஆகிய) காலம்	—	இளமைக் காலம்.
உண்மை (ஆகிய) கதை	—	உண்மைக் கதை.
கருப்பு (ஆகிய) கொடி	—	கருப்புக் கொடி.
சிவப்பு (ஆகிய) சட்டை	—	சிவப்புச் சட்டை.

புதுமை (ஆகிய) பெண் — புதுமைப் பெண்.
முதுமை (ஆகிய) பருவம் — முதுமைப் பருவம்.
வெள்ளை (ஆகிய) தாள் — வெள்ளைத் தாள்.
இனிப்பு (ஆகிய) பண்டம் — இனிப்புப் பண்டம்.

—ஆனால், இவை போலவே,

சிறுமை (ஆகிய) கதை — சிறுகதை

—என்பதில், சிறுமை என்னும் சொல்லின் இறுதி நிலையாகிய 'மை' கெட்டு, 'சிறு' என்று மட்டும் நின்று, கதை என்னும் வருமொழியொடு சேர்ந்து 'சிறுகதை' என்று வந்தது. இது சிறுக்கதை என்று வராது. இவ்வாறு,

(2) இறுதிநிலை கெட்டுப் புணரும் பண்புத் தொகையில் வல்லெழுத்து மிகாது.

எடுத்துக் காட்டுகள்:

முது(மை ஆகிய) கண்ணன் — முதுகண்ணன்.
முது(மை ஆகிய) கூத்தன் — முதுகூத்தன்.
சிறு(மை ஆகிய) தொழில் — சிறுதொழில்.
சிறு(மை ஆகிய) பட்டி — சிறுபட்டி.

சிறுத்தொண்டர் என்பது போலும் ஓரிரண்டிடங்கள் தவிரச் சிறு என்னும் சொல்லொடு கூடிய பிற சொற்களில் வல்லெழுத்து மிகவில்லை.

ஆனால், 'புது' 'பொது' 'தனி' என்னும் பண்பியல் சொற்களின் பின் வலி மிகுதலே வழக்காக உள்ளது.

(எ-டு) புதுப்பட்டி, பொதுப்பணம், தனிக்கட்சி.

எண்ணுப் பெயர்கள்:

ஒன்று, இரண்டு, மூன்று...பத்து, நூறு, ஆயிரம், இலக்கம், கோடி என்பன எண்ணுப் பெயர்கள். அதே போல் அரை, பாதி என்பனவும் எண்ணுப் பெயர்களே.

(3) இவற்றுள், எட்டு, பத்து, கோடி ஆகிய எண்ணுப் பெயர்களின் பின்னும், பாதி, அரை ஆகிய பின்ன எண்ணுப் பெயர்களின் பின்னும் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) எட்டுத் தொகை... அரைச்சீட்டு
எட்டுக்கால்... அரைக்கால்
பத்துத் தலை... பாதித்துணி
பத்துப்பாட்டு... பாதிக்கட்டணம்.
கோடிப் பேர்...

(4) பிற எண்ணுப் பெயர்களின் பின் வல்லெழுத்து மிகாது;

(எ-டு) ஒன்று செய் நான்கு பக்கம்
இரண்டு கால் ஐந்து தலை
மூன்று பரிசு ஆறு பேர்.

(5) இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லெழுத்து மிகும்:

சாரை என்பது ஒருவகைப் பாம்பின் சிறப்புப் பெயர். பாம்பு என்பது பொதுப் பெயர். இவ்விரண்டு தனித்தனிப் பெயர்களும் சேர்ந்து இணைந்து நின்று சாரைப்பாம்பு என்று வரும் பொழுது இ'து இருபெயர் ஒட்டு ஆகும்

இங்கு, 'சாரையாகிய பாம்பு' என்பது போல வரவேண்டிய நிலையில், நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் இடம் பெறவேண்டிய 'ஆகிய' என்னும் பண்புருபு மறைந்து நிற்பதால், இ'து இருபெயரொட்டுப்பண்புத் தொகை எனப் பெறுகின்றது.

எனவே, இதில் வல்லெழுத்து மிகும்.

எடுத்துக் காட்டுகள்:

செவ்வாய்க்கிழமை தச்சுத்தொழில்
ஆடவைத் திங்கள் முல்லைப்பூ
வேங்கைப் புலி

(6) வினைத் தொகையின் இடையில் வல்லெழுத்து மிகாது.

'தொடர்கதை' என்னும் சொல்தொடரில் 'தொடர்' என்னும் வினைச் சொல், காலத்தைக் காட்டாமல், மூன்று காலத்திற்கும் பொருந்துமாறு, காலங்காட்டும் ஈறு மறைந்து நிற்கிறது:

தொடர்(ந்த) — இறந்தகாலம்.
தொடர்(கிற) — நிகழ்காலம்
தொடர்(+உம்)— எதிர்காலம்

இவ்வாறு காலங்காட்டும் வினையீறு மறைந்து (தொக்கி) வருவது வினைத் தொகை என்று வழங்கப் பெறுகிறது. வினைத் தொகையில் வல்லெழுத்து மிகாது.

வினைத் தொகையில் நிலைமொழி வினைப் பகுதியாகவும், வருமொழி பெயர்ச் சொல்லாகவும் இருக்கும்.

(எ-டு) அணிகலன் இடுகாடு செய்குன்று
நடு கல் சுடுசோறு திருவளர் செல்வன்
வளை கதிர் புதைபொருள் திருநிறை செல்வி.

(7) உம்மைத் தொகையில் வல்லெழுத்து மிகாது.

வெற்றிலை, பாக்கு, சுண்ணம்பு என்று சொல்லும்போது, 'வெற்றிலையும் பாக்கும் சுண்ணம்பும்' என்று ஒவ்வொரு சொல்லின் இறுதியிலும் வரவேண்டிய 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து (தொக்கி) வருகிறது.

எனவே இ'து உம்மைத் தொகை எனப்படும்.

இது போலும் உம்மைத் தொகையில் வல்லெழுத்து மிகாது.

(எ-டு) தாய் தந்தை — (தாயும் தந்தையும்)
சேர சோழ பாண்டியர் — (சேரனும் சோழனும் பாண்டியனும்)
செடி கொடிகள் — (செடியும் கொடியும்)
இரவு பகல் — (இரவும் பகலும்)

பூரி கிழங்கு — (பூரியும் கிழங்கும்)
தம்பி தங்கையர் — (தம்பியும் தங்கையும்)
சட்டி பானை — (சட்டியும் பானையும்)

(8) உவமைத் தொகையில் வல்லெழுத்து மிகும்.

ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை, 'மூக்குத்திப் போலும் பூ' என்பது ஓர் உவமைத் தொடர்.

போலும் (போன்ற, போல) என்பது உவம உருபு எனப்படும். புரைய, மான, கடுப்ப முதலியனவும் உவம உருபுகளே!

'மூக்குத்திப் பூ' என்பதில் 'போலும்' என்னும் உவம உருபு மறைந்து (தொக்கு) நிற்பதால் இது உவமைத் தொகை எனப் பெறும்.

உவமைத் தொகையில் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) மலர் (போலும்) கை — மலர்க்கை
மதி (போலும்) குடை — மதிக்குடை
குவளை (போலும்) கண் — குவளைக் கண்
வேய் (போலும்) தோள் — வேய்த்தோள்
மலை (போலும்) தோள் — மலைத்தோள்
முத்து (போலும்) பல் — முத்துப்பல்.

(9) எழுவாய்த் தொடரில் வல்லெழுத்து மிகாது.

எழுவாயைத் தொடர்ந்து பயனிலை வந்து—வினைமுற்றைக் கொண்டு—முடியும் தொடர்கள் எழுவாய்த்தொடர் என்று பெயர்.

இவ்வெழுவாய்த் தொடரில் வல்லெழுத்து மிகாது.

(எ-டு) மங்கை பாடினாள் — மங்கை எழுவாய்.
பாடினாள்—வினைமுற்று-பயனிலை
தம்பி சென்றான் — தம்பி எழுவாய்.
சென்றான்-வினைமுற்று-பயனிலை
துணி கிழிந்தது — துணி எழுவாய்.
கிழிந்தது-வினைமுற்று-பயனிலை

(10) இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லெழுத்து மிகும்.

'நூல்' என்னும் சொல்லோடு 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்து நூலை என்று நிற்கின்றது.

'படி' என்னும் வருமொழிக்கு ஏற்ப நூலை என்னும் நிலைமொழியின் பின் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) நூலைப் படி — உண்மையைச் சொல்.
பாலைக் குடி — ஊரைச் சுற்றாதே!

(11) அஃறிணை இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லெழுத்து மிகாது.

தமிழைப் படித்தேன் — என்பது இரண்டாம் வேற்றுமை விரி;

இது, தமிழ் படித்தேன் — என்று வரும் பொழுது இரண்டாம் வேற்றுமை உருபான 'ஐ' மறைந்து (தொக்கு) நிற்பதால் இது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

இவ்வாறு அஃறிணை இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லெழுத்து மிகாது.

(எ-டு) வெற்றி கொண்டான் ஆத்திசூடி
விடை பெற்றார் கல்வி கற்றார்
ஆடை கட்டினான் முடி புனைந்தான்.

(12) உயர்திணை இரண்டாம் வேற்றுமைத் தொகையானால் வல்லெழுத்து மிகும்; அல்லது வேறு மாற்றங்களைப் பெறும்.

பெரியாரைப் போற்று—என்பது

பெரியார்ப் போற்று —என்று தொகையாகவும் வரும். பெரியார்—உயர்திணை—எனவே இங்கு வல்லெழுத்து மிகும்.

(எ-டு) ஒன்னார்த் தெறுதலும்
ஒண்ணலர்ச் செகுத்தார்
தெளிந்தார்ப் பேணுமின்.

(13) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லெழுத்து மிகும்.

யானைப்பாகன்-என்னுந் தொடர் 'யானையை ஓட்டும் பாகன்' என்றும் விரிந்து பொருள் தரும்.

யானையை ஓட்டும் பாகன்—என்பதில் 'யானையை' என்னும் சொல்லில் உள்ள 'ஐ'—இரண்டாம் வேற்றுமை உருபு: 'ஓட்டும்' என்னும் சொல் பாகனால் விளையும் பயனைக் குறிக்கும் சொல். ஆனால், 'யானைப் பாகன்'—என்பதில் உருபும் மறைந்து (தொக்கு) உள்ளது. பயனைக் குறிக்கும் 'ஓட்டும்' என்னும் சொல்லும் மறைந்து (தொக்கு) உள்ளது.

எனவே 'யானைப் பாகன்' என்னும் தொடர், இலக்கண முறைப்படி—

'இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க (இரண்டு சொற்களும் ஒருசேர மறைந்து நிற்கும்) தொடர் ஆகும். இத்தகைய இடங்களில் எல்லாம் வல்லெழுத்து மிகுந்து வரும்.

(எ-டு) கொடித்தேர் — கொடியை உடைய தேர்
முடித்தலை — முடியை உடைய தலை
செருப்புக்கால் — செருப்பை அணிந்த கால்
தாமரைக்குளம்— தாமரையைக் கொண்ட குளம்.

(14) ஒடு, ஓடு, என்னும் மூன்றும் வேற்றுமை உருபுகளின் பின் வல்லெழுத்து மிகாது.

தொய்வம் (RUBBER)

பதினெட்டாம் நூற்றாண்டில் பால்வடியும் தொய்வ (ரப்பர்) மரங்களைக் கண்ட செவ்விந்தியர்கள் அவற்றை அழும் மரங்கள் என்றே குறிப்பிட்டனர்.

தொய்வ மரத்திலிருந்து வரும் வெள்ளை நிறப் பாலால் ஆன உருண்டைகள், கரிக்கோளால் (பென்சிலால்) எழுதப் பெற்ற வரிகளை அழிக்கவல்லன என்பதை 1770-இல் சோசப் பிரீசுட்லீ என்ற ஆங்கில அறிவியலாளர் கண்டறிந்தார். இப்படி 'RUB' (தேய்ப்புச்) செய்வதால் அதற்கு 'ரப்பர்' (Rubber) என்று பெயரிட்டு அழைக்கலாயினர்.

உலகில் முதன்முதலில் தொய்வம் (ரப்பர்) உருவாக்கும் தொழிற்சாலை பாரீசில் நிறுவப் பெற்றது. தாமசு ஆன்கா என்ற ஆங்கில அறிவியலாளர் 1820-இல் தொய்வப்பால் உருண்டைகளைப் பயன்படுத்தி ஓர் ஒழுங்கான வடிவம் கொடுக்கும் இயந்திரத்தை உருவாக்கினார். அவரே தொய்வப்பால் பதப்படுத்தலின் முன்னோடி.

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஒடு, ஓடு, உடன், ஆல், ஆன் என்பன மூன்றாம் வேற்றுமை உருபுகள்.

இவற்றுள் ஒடு, ஓடு என்னும் இரண்டு உருபுகள் உள்ள சொற்களொடு வல்லெழுத்துத் தொடக்கம் உள்ள சொற்கள் வந்து புணருமானால் வல்லெழுத்து மிகாது.

(எ-டு) கணவனொடு சென்றாள்   வேலோடு சாய்ந்தான்.
கண்ணொடு கண்   மார்போடு தழுவினார்.

(15) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லெழுத்து மிகும்.

'வெள்ளியால் ஆன காசு'—என்பதையே வெள்ளிக்காசு என சுருக்கிக் கூறுகிறோம்.

'ஆல்' மூன்றாம் வேற்றுமை உருபு. 'ஆன' என்பது பொருட் பயன் தரும் சொல்,

'வெள்ளிக் காசு' என்பதில் உருபும் பயனும் உடன் தொக்கு (மறைந்து) நிற்கின்றன. எனவே, இது உருபும் பயனும் உடன் தொக்க தொகை. இவ்விடங்களில் எல்லாம் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) பருத்தித் துணி — பருத்தியால் ஆன துணி
பட்டுப் புடைவை — பட்டினால் நெய்த புடைவை
இரும்புச் சட்டி — இரும்பினால் செய்த சட்டி
ஞெகிழிக் கூடை — ஞெகிழியால் (பிளாசுடிக்கால்) பின்னிய கூடை.

(தொடரும்)

பின்னர் 1947-இல், சார்லசு குட்இயர் என்ற அமெரிக்கர், தற்செயலாக அடுப்பில் தொய்வம் மற்றும் கந்தகக் கலவை சிந்தியதைக் கண்டு, இரண்டையும் ஒன்ருய்க் கலந்து உறுதியான கெட்டித்தொய்வ (Vulcanize) முறையைக் கண்டுபிடித்தார். அதன்பின், இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் டன்லப் என்பவர் 1888-இல் முதன்முதலாகக் காற்றடைத்த வட்டகை (Tyre)களை உருவாக்கினர். தம் மகன் ஓட்டும் மூன்று சக்கர மிதி வண்டியின் எடையைக் குறைக்கவே அவர் இந்த முறையைக் கையாண்டார்.

பயிர் (நிலத்திணை) இனத்தில் பிறந்து தொழிலகங்களில் புகுந்து, மாழைக் கலவைகளுடன் இணைந்து, குழந்தை-களின் விளையாட்டுப் பொருள் முதல் போர் வானூர்திகளின் பாகங்கள் வரை, பல்லாயிரக்கணக்கான பயன்மிகு பொருள்-களின் நிலைக்களன் என்னும் சிறப்பைப் பெறுவது தொய்வம் (ரப்பர்) எனப் பெறும் பொருளே. இன்று தொய்வத்திலிருந்து உருவாக்கப் பெறும் பொருள்களின் எண்ணிக்கை நாற்பது ஆயிரத்திலிருந்து ஐம்பது ஆயிரம் வரை என்று கணக்கிடப் பெற்-றுள்ளது. உந்து வண்டி உறுப்புகளில் தொய்வத்தால் செய்யப் பெற்ற பொருள்கள் மட்டும் 600 என்று பட்டியலிடப் பெற்-றுள்ளன.

முதல் உலகப் போரின் பொது இயற்கைத் தொய்வத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட, ஆய்வகங்களில் வேதியல் கலவையில் உருவாக்கப் பெற்ற செயற்கைத் தொய்வம் (Synthetic Rubber) இன்று மூலத்தை விஞ்சும் போலியாக பெருமாண்ட வடிவம் கொண்டுள்ளது.

இயற்கைத் தொய்வ உருவாக்கத்தில் இந்தியா ஐந்தாவது பெரிய நாடு. ஆண்டு தோறும் அதன் விளைச்சல் இன்னும் பெருகி வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இலக்கை மிஞ்சிய உருவாக்கம் வேறு எந்தத் தோட்டப் பயிரிலும் இவ்வாறான வளர்ச்சியை எட்டியதில்லை. எனினும் இருவகைத் தொய்வத்-திற்கும் தட்டுப்பாடு தொடர்ந்து நிலவுகிறது. காரணம் பெருகி வரும் தேவையே!

இந்தியாவின் ஒட்டு மொத்தத் தொய்வத் தேவைப்பாடு இப்போது ஆண்டுக்கு மூன்று இலக்கத்து அறுபதாயிரம் கல்லெடை (Ton) ஆகும். இ'து அடுத்த பத்தாண்டுகளில் ஒன்ப-தரை இலக்கம் கல்லெடையாக இருக்கும் என்று கணக்கிடப் பெறுகிறது.

தொய்வ மரங்கள் பெரும்பாலும் தென் மாநிலங்களில்தாம் மிகுதியும் பயிர் செய்யப் பெறுகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட கணக்கின்படி 3,70,000 'எக்டேர்' பரப்பள-வில் தமிழ்நாடு, கேரளா, கருநாடகம் ஆகிய மாநிலங்களில் தொய்வத் தோட்டங்கள் உள்ளன. இதில் முக்கால் பங்குக்கு மேல் மூன்று இலக்கம் சிறு உழவர்கள் வயம் இருக்கிறது. ஒரு

எக்டேர் பரப்பளவு தொய்வத் தோட்டத்திலிருந்து 1979-80-இல் 770 அயிர எடை (கிலோ) தொய்வம் அதுவே அடுத்த ஆண்டு-களில் 860 ஆயிர எடையாக உயர்ந்தது. இப்பொழுது இது 900 ஆக உள்ளது. இது விரைவில் 1000 அயிர எடை உயரத்-திட்டமிடப்பட்டுள்ளது.

தோராய மதிப்பீட்டின்படி நடப்பு ஆண்டில் தொய்வ விளைவு 25,000 கல்லெடைக்குச் சற்று கூடுதலாக இருக்கும். இது 1990-91-இல் 35,000 கல்லெடையாகவும், 1994-95-இல் 4,29,000 கல்லெடையாகவும் உயரும் என்று எதிர்பார்க்கப் பெறுகிறது. இந்த நிலை இவ்வாறே வளர்ச்சியுற்றால் அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா தொய்வ விளைவில் தன்னிறைவு அடைய வாய்ப்பிருப்பதாகக் கருதப் பெறுகிறது. அதுவரை இந்தியாவின் தேவைக்காக ஆண்டுக்கு 4000 கோடி உருபா தொய்வ இறக்கு மதிக்காகச் செலவிட வேண்டி உள்ளது.

உலகெங்கிலும் தொய்வத் தேவை கூடிவிட்டதால் இந்தியா-வில் அயிரஎடை (கிலோ) ஒன்றிற்கு உரு. 23-50 என்று தொய்வம் விற்கப் பெறுகிறது. ஆனால் இவ்விலை இயற்கைத் தொய்வத்-திற்கே; செயற்கைத் தொய்வத்தின் விலையோ ஓர் அயிரஎடைக்கு உருபா 27/-ஆகும்.

சில சுவையான செயதிகள்:

(1) உலகில் உள்ளவர்கள் ஒவ்வோராண்டும் தலைக்கு 10 அயிரெடை தொய்வப் (ரப்பர்) பொருள்களைப் பயன்படுத்து-கின்றனர். வகு சரியாக (சராசரியாக) இது தலைக்கு 3 அயி-ரெடை (கிலோ) ஆகும். ஆனால், இந்தியாவில் மட்டும் தலைக்கு 1 அயிரெடை தொய்வமே வகுசரியாகப் பயன்படுகிறது.

(2) தொய்வத் தோட்டங்களுக்கு ஏற்ப இயற்கைச் சூழல் நிலநடுக்கோட்டின் இருபுறமும் 1100 அயிரமாத்திரி (கி. மீ.; ஏறத்தாழ 887 கற்கள்) தொலைவுக்கு விரிந்திருக்கிறது.

(3) உலகில் தொய்வத் தோட்டப் பரப்பளவு ஏறத்தாழ 63 இலக்கம் எக்டேர் நிலம் ஆகும்.

(4) மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சீனா, இந்தியா ஆகிய நாடுகள் உலகின் மொத்த தொய்வ விளைச்சலில் 88 விழுக்காடு விளைவிக்கின்றன.

(5) பால் மரங்களில் சாம்பியன் என்னும் தொய்வ மரவகை ஆண்டுக்கு 9 அயிரஎடை (கிலோ) தொய்வத்தை விளைவிக்கும் திறன் கொண்டவை.

(6) தொய்வ மரம் வளர்ந்து பலன் தர ஏழு ஆண்டுகள் ஆகும். அவை 25 அல்லது 30 ஆண்டுக்காலம் தம் முழுத்-திறனுக்கும் பால் சுரக்கும். ஒரு குறுக்க (ஏக்கர்) நிலத்தில் நூறு தொய்வ மரங்களை வளர்க்கலாம். ஒவ்வொரு மரத்திலிருந்தும் ஆண்டு ஒன்றுக்கு 5 முதல் 15 பதினம் (லிட்டர்) வரை தொய்வப் பால் சுரக்கும்.

—அடிப்படை 'லாரி' இதழ், அக். 89.

தமிழர் திருநாள்.

— வ, வேம்பையன், கல்பாக்கம்.

பொங்கல் திருவிழா தமிழர் கூறும் நல்லுலகம் போற்றும் பெருவிழா. போகித் திருநாள், பொங்கல் புத்தாண்டுப் பெரு-நாள், இரண்டும் தமிழ் மக்களின் வீட்டு நலனையும், திருவள்ளுவர் திருநாள், உழவர் திருநாள் இரண்டும் தமிழ்நாட்டு நலனையும் இயல் தமிழ்த் திருநாள், இசைத் தமிழ்த் திருநாள், நாடகத் தமிழ்த் திருநாள் மூன்றும் தமிழ் மொழியின் நலனையும் பேணிப் போற்றி வருகின்றன.

சிலை (மார்கழி) இறுதிநாள் தொடங்கி, சுறவம் (தை) 6 ஆம் நாள் முடிய ஒரு கிழமை விழாவாகப் பொங்கல் விழா கொண்டாடப் படுகிறது.

இன்று உலகில் 72 நாடுகளில் வாழ்கின்ற ஏறத்தாழ பதின் மூன்று கோடித் தமிழ் இன மக்கள் சாதி, மதம், நிறம், கட்சி, நாடு வேறுபாடு இல்லாமல் பண்பாட்டு விழாவாக, தமிழர் திருநாளாகப் பொங்கல் பொன்னுளைக் கொண்டாடுகிறார்கள்.

இவ் விழாவைக் கீழ்க் குறிப்பிடுமாறு கொண்டாடல் வேண்-டும் என்று தமிழகப் புலவர் குழுவும் தமிழ் நாடு அரசும் முறை செய்து வேணடுகோள் விடுத்துள்ளன.

சிலை (மார்கழி) இறுதிநாள்	:	போகி விழா.
சுறவம் (தை) 1..............	:	பொங்கல் புத்தாண்டு விழா.
சுறவம் (தை) 2..............	:	திருவள்ளுவர் விழா.
சுறவம் (தை) 3..............	:	உழவர் விழா.
சுறவம் (தை) 4..............	:	இயல் தமிழ் விழா.
சுறவம் (தை) 5..............	:	இசைத் தமிழ் விழா.
சுறவம் (தை) 6..............	:	நாடகத் தமிழ் விழா.

இவ்வாறே
தமிழர் திருநாள் கொண்டாடுவோம் — உலகில்
தலை நிமிர்ந்து செந்தமிழின் புகழ் பாடுவோம்.

சிந்தனை மொழிகள்

- அன்பு செய்ய அறிந்திராதவனின் அறிவு ஒன்றுமில்லை.
- மகிழ்ச்சி என்பது தனியாகக் கிடைப்பதில்லை. ஒருவர் பெற-வும் மற்றொருவர் தரவும் ஆன இருவர் சேர்ந்தே அதைப் பெறமுடியும்.
- அன்பினால் முடியாதது ஒன்றுமில்லை. அன்பில்லாமல் முடிவதும் எதுவுமில்லை.
- அன்பு கொடுக்கப்பெறுவதன்று; பகிர்ந்து கொள்ளப் பெறுவது.
- நாகரிகம், பண்பாடு என்பது ஒருவரோடொருவர் அன்பா-யிருப்பதே!
- அன்பின் முதல் அடையாளம் அறம் (ஞாயம், நீதி). அதே போல் அறத்தின் விளைவு அமைதி.
- உலகில் ஏன் இத்துணை கொடுமை? நேர்மையின்மை? போர்-கள்? அழிவுகள்? — உலகில் அன்பு குறைந்துபோனதுதான் அதற்குத் தலையாய காரணம்,

மகிழ்ச்சியாயிருப்பது, பிறரை மகிழ்விப்பதனால் ஏற்படுவ-தாகும்.

— இரவூல் போலரோவ்.

முத்துமொழிகள்

அறவுணர்வு துணிவையும், நல்லெண்ணங்கள் அஞ்சாமையையும் தரும். —சேக்சுபியர்.

வாழ்க்கைக்காகப் போராடுவதே இவ்வுலகில் சிறந்த கல்வியாகும். —வெண்டல் பிலிப்சு.

உயர்ந்த குறிக்கோள் ஒன்றை வைத்துக்கொள்; அதையே நோக்கி உழை; அதோடு நெருங்கியிரு; உறவாடு. பிறகு அதனினும் உயர்ந்த குறிக்கோளை நாடு. இப்படித்தான் நம் வாழ்க்கை உயர்ந்து போகிறது. —குளோரியா யங்.

பிறர் உன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறாயா? அப்படியானால் முதலில் நீ உன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும். —வெர்னன் கோவார்டு.

பிறரிடம் நீ எதை விரும்பவில்லையோ, அத்தன்மை முதலில் நீ உன்னிடம் இல்லாமல் பார்த்துக் கொள். —தாமசு இசுப்பிராட்.

என் வாழ்வைப் பின் திரும்பிப் பார்க்கிறேன்; என் நண்பர்கள் தொடர்பான மதிப்புமிக்க பல நல்ல செய்திகள், செயல்கள் இருப்பதை உணர்கிறேன். —ஏ. சி. இசுட்ரீட்.

உன் நம்பிக்கை முதலில் உன்மேலேயே இருக்கட்டும். அப்பொழுதுதான் உன்னால் அரும்பெருஞ் செயல்களைச் செய்ய முடியும். —ஆரிசன் எசு. மார்டன்.

புதிதாகச் சந்திக்கும் ஒருவரிடம் ஏதாவது ஒன்றைப் பற்றி அவரின் கருத்தைக் கூறும்படி கேள்; அதுதான் பின்னர் இருவரும் இணையப் பயன்படும். —எர்பர்ட். என். கேசன்.

ஒருவர் மேல் இரக்கம் காட்டுவது, நம் உள்ளத்தை ஆழமாகவும், உயர்ந்த உணர்வுமிக்கதாகவும், பிறர் பாராட்டத்தக்கதாகவும் மாற்றுகிறது. என்றிகிளே.

நீ எப்பொழுதும் நல்ல செயல்களையே செய்ய விரும்புகிறாயா? அப்படியானால் உன்மேல் ஆழ்ந்த நம்பிக்கையுடன் அதையே எண்ணிக் கொண்டிரு. உன் ஊக்கத்தை ஒரு பொழுதும் இழக்க மாட்டாய். —எர்னால்டு செர்மன்.

என்ன நடக்கிறதென்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கவேண்டாம்; எது நடந்தாலும் நம் செயலையும் அதை வைத்துத்தான் அமைத்துக் கொள்ளவேண்டும். —பிரான்சிசு கே.

உன்னை எதுவும் எவரும் உன்னைவிடத் துன்புறுத்திவிட முடியாது; நீயே அடிமைப்பட்டால் தவிர, உன்னை யாராலும் அடிமைப்படுத்திவிட முடியாது. —எர்பர்ட் என். கேசன்.

ஒரு செயலைத் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்; ஆனால், உண்மையிலேயே நீ அதைச் செய்யும் பொழுதுதான் தெரிந்து கொள்ளுகிறாய்; அதனால் எதையும் செய்ய முற்படு. —சொபாக்கில்சு.

உன் இல்லத்தை உயிர்ப்பாக மகிழ்வாக வைத்துக் கொள்ள விரும்புகிறாயா? அப்படியானால் ஒரு சிறிது அதில் கவனம் செலுத்து. —டேல் கார்னிசி.

எப்பொழுதும் நம்பிக்கை இழவாதே! நீ இழந்ததைப் பற்றிச் சிறியதாக நினை. நீ வைத்திருப்பதைப் பெரியதாக எண்ணு! கடந்ததைப் பற்றி எப்பொழுதும் வருத்தப்படாதே! —எர்பர்ட். என். கேசன்.

குவித்து வைக்கும் பணிகள்தாம் உனக்குப் பெருஞ்சுமையாக இருக்கும்; அவற்றை அப்பொழுதைக்கப்பொழுது செய்து விடுவதே விடுவிப்பாக இருக்கும். —நார்மன் வின்செண்ட் பீல்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)